1991 சனவரி 25]

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் பெரும்பாலான நெல் கொள் முதல் மையங்களில் நெல் மூட்டைகளை வெளியிலே அடுக்கி வைக்கிற நிலை இருக்கிற காரணத்தால், மழையால் பெரிதும் சேதம் ஏற்படுவதோடு, தரை வாடகையும் அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே நிரந்தரமாக நெல் கொள் முதல் மையங்களுக்குக் கட்டிடங்களை அமைக்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பயறு, உளுந்து, புஞ்சைப் பயிராக இருக்கிற தென்று சொன்னார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலத்தில் பயறு, உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 2, 3 இலட்சம் ஏக்கர்களில் அந்தப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அந்தப் பயறு, உளுந்து விற்பனைக்கு வரும் போது, அவற்றைத் தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டி யிருக்கிறது. குறிப்பாக, திருவாரூர் மார்க்கெட்டில் பல்லாயிரக் கணக்கான மூட்டைகள் ஓராண்டுக்குக் கொள்முதல் செய்யப் படுகின்றன. இதற்காகத் தனி ஏற்பாடு செய்ய வேண்டியதில்லை. இப்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நெல் கொள்முதல் நிலையங்களிலேயே இவற்றை வாங்கு வதற்கு ஏற்பாடு செய்து தந்தால் அது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இவைகளை—பயறு வகைகளைக் கொள்முதல் செய்வதா அல்லது வேறு ஏற்பாடுகள் செய்வதா என்பதை அரசு பரிசீலித்து முடி வெடுக்கும்.

இருதமால் நதித் திட்டம்.

***2639—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட? வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருதமால் நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இத்திட்டம் விரைவில் நிறைவேற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், சிவகங்கை வட்டம், அம்பலத்தடி கிராமத்தில், கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டி மானாமதுரை வட்டத்தில் உள்ள இராக்கியம், இடைமறிச்சான், ஆகிய கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்க 1990 ஆம் ஆண்டுத் திட்டத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனாலும் அந்தப் பகுதி மக்கள் அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அருப்புக்கோட்டைத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்களும் அந்த இடத்தை மாற்றி, இருஞ்சிறை அருகே அணை கட்டி, இருஞ்சிறை, உலக்குடி, மறையூர், வரிசையூர், மற்றும் ஏனைய கண்மாய்களுக்குக் கூடுதல் நீர் வரத்து தருவதற்கான திட்டமொன்று விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில், இரண்டாவது இடத்தை ஆய்வு நடத்தி, அந்த இடத்திலே அணையைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அம்பலத்தடி கிராமத்திலேகூட வேறொரு அணையைக் கட்டுவதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1975-லே வைகையிலே இருக்கின்ற விரகனூர் அணையிலிருந்து பெரம்பலூர் கால்வாய் மூலமாக, கிருதமால் நதித் திட்டம் செயல்படுமென்று அன்றையத்தினம் அறிவித்தார்கள். இடையிலே வந்த ஆட்சி அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. இப்போது அந்தத் திட்டத்தை எடுத்திருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வைகையிலே இருக்கிற பெரம்பலூர் அணையிலிருந்து கிருதமால் நதித் திட்டம் பெரம்பலூர் கால்வாய் மூலமாக இதே இருஞ்சிறை, மற்ற கிராமங்களுக்கு வருவதோடு, ஏற்கனவே கிருதமால் நதியினுடைய உரிமை பெற்ற இடமாக இருக்கக்கூடிய அபிராமம், தலக்குடி, குளவாசல், வல்லக்குளம் போன்ற கண்மாய்களுக்கும் இந்தப் பாசனம் விரிவுபடுத்தப்படுமா? அதை மறு பரிசீலனை செய்து, திட்டத்தை விரிவு படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருஞ்சிறையில் கட்டுகிற அணை, அதைக் கட்டிய பிறகு வருச்சூர், மறையூர் ஆகியவற்றுக்கெல்லாம் தண்ணீர்

1991 சனவரி 25]

போய்க்கொண்டு இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் காதர் பாட்சா சொன்ன அந்தக் கருத்துபற்றியும் ஆய்வு மேற்கொள் ளப்படும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகையிலிருந்து எங்கள் பகுதிக்கு உரிமை கொடுக்காவிட்டாலும், சர்ப்ளஸாக மழைக் காலங்களில் வைகையில் வீணாகப் போகிற தண்ணீரை, விரகனூர் அணை தடுத்து இருக்கிற—அந்த வைகை சீரமைப்புத் திட்டத்திலே தடுத்து அணை கட்டி இருக்கிற காரணத்தாலே, மழைக் காலத்திலே உபரியாக வருகிற தண்ணீரை எங்கள் பகுதி போன்ற பிற்படுத்தப்பட்ட பகுதி—தேவர் திருமகன் மாவட்டம், நரிக்குடி பகுதியையும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத் தூர் பகுதியையும் விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தற் போது வைகையில் உபரிநீர் இல்லை. ஆனால், வைகைப் பகுதி யும், மற்றப் பகுதிகளும் நவீனப்படுத்துகிற திட்டம் ஏற்படுத் தப்பட்ட பிறகு அதிலே வருகிற உபரிநீரையும், மழைக்காலங் களில் வருகிற உபரி நீரையும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வகையில் அமைப்பதற்கு அரசு மேற்கொள்ளும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கிருதமால் நதி அணைக்கட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அருப்புக்கோட்டைத் தொகுதியிலுள்ள திருச்சுழி தாலுக்காவில் அண்மையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டி, அந்தத் திட்டத்தைத் துவக்கிவைத்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் எந்த ஆண்டு துவங்கும் ? அது துவங்குவதற்கான சரி யான உத்தரவுகளை அரசு பிறப்பித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துவங்குவதற்காகத்தானே கால்கோள் விழா நடத்தப்பட்டு இருக்கிறது ! மீண்டும் இது எந்த ஆண்டு துவங்கும் என்றால்......?

திரு. வே. தங்கபாண்டியன் : இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உத்தரவு போட்டு விட்டுக் கால்கோள் விழா நடத்தி இருக்கலாம் போல் இருக்கிறது என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அம்பலத்தடி கிராமம் அருகே கட்ட வேண்டுமென்று தான் பார்ட்-2 ஸ்கீமில் நாம் சேங்க்ஷன் கொடுத்தோம். ஆனால், அதன்படி கட்டுவது என் றால் நாளைக்கே கடைக்கால் எடுக்கத் தயார். ஆனால், நாங் கள் அடிக்கல் நாட்டிய பிறகு அந்த ஊர் மக்களும், மாண்புமிகு

உறுப்பினர் தங்கபாண்டியனும், ''இல்லை, இல்லை, இதை மாற்றி இருஞ்சிறை அருகே கட்ட வேண்டும்'' என்று கூறிய காரணத்தாலே ஒரு டைவர்ஷன் அதற்காக சில ஆய்வுகள் நடத்த வேண்டி இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொண்டால், அம்பலத்தடியிலேயே நாளைக்கே கட்டத் தயாராக இருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்கிறாரா ?

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர், காதர்பாட்சாவுக்கும், தங்கபாண்டியனுக்கும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். கிருதமால் நதியினுடைய பூர்வீகம் மதுரை திடீர் நகரில் ஆரம்பமானது என்று வரலாறு இருக்கின்றது. அதைச் செப்பனிடும் முயற்சியில் பொதுப்பணித்துறை இறங்கினால், இப்போது இருக்கக்கூடிய பெரியார் பஸ் ஸ்டாண்டு தெப்பக்குளமாக இருப்பது மாறும் என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுவாக, கிருதமால் நதி, துவரிமான் கண்மாயில் உபரிநீரில் உற்பத்தியாகி ஓடிக் கொண்டு இருந்தது. காலப்போக்கிலே அந்த ஆறு மறைந்து போய்விட்டது. கொம்பைக் கண்மாயில் உற்பத்தி ஆகித்தான் மேலவெள்ளூர் கண்மாய் போன்ற பகுதிகளுக்கு அது பாசனத்தை அளித்துக்கொண்டு இருக்கிறது. ஆக, அந்தத் தூர்ந்து போன பகுதியைப் புதைபொருள் ஆராய்ச்சியைப் போலக் கண்டு பிடித்து மராமத்து செய்யவேண்டி இருக்கிறது. அதற்கென்று ஒரு தனித் திட்டம் அரசின் சார்பிலும், மாநகராட்சி சார்பிலும் தீட்டப்படுகிறது.

பவானி ஆற்றின் குறுக்கே பாலம்.

*10105—திரு. தூ. க. சுப்பிரமணியம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், கள்ளிப்பட்டி அருகில் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசன் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.